திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளில்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆடிமீ 16உ சனி (31—7—54)
வெளியூர்: ஆடிமீ 17உ ஞாயிறு (1—8—54)

மலர்: 2
இதழ்: 41

பொதுச்செயலாளர் அறப்போர்க் களத்தைப் பார்வையிடுவார்

நாஞ்சிலில் தி. மு. கழக தோழர்களைச் சந்தித்துப் பேசுவார்

நிலைமைகளை நேரில் அறிந்தபின்னர் இறுதி முடிவு?

திருவாங்கூர் தமிழர்களின் அறப்போர் மிகவும் வலுவடைந்து வருகிறது.

அறப்போரில் கலந்துகொண்ட திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ராமசாமி பிள்ளை இரண்டுவார சிறை தண்டனை பெற்றிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறப்போர் நிலைமைகளை நேரில் அறிய நாகர்கோவிலுக்குச் சென்றிருக்கிறார்.

மதுரை, ஜூலை 29 —

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, துணைச்செயலாளர்: கே. ஏ. மதியழகன் ஆகியோர் இன்று மதுரையில் கழகத் தோழர்களைச் சந்தித்து திருவாங்கூர் தமிழர்கள் அறப்போர் பிரச்சினைகள் குறித்துக் கலந்து பேசினார்கள்.

பின்னர் அவர்கள் நாகர்கோவில் புறப்பட்டுச் சென்றனர். திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் சார்பில் நடைபெறும் அறப்போராட்டத்தை நேரில் கண்ட பின்னர், நாகர்கோவிலில் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக செயலாளர் ஜான், மற்றும் கழகத் தோழர்களைச் சந்தித்து அறப்போர் பற்றி ஆலோசனை செய்வார்கள் என்று தெரிகிறது.

அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்த பின்னர் தி. மு. கழகம் திருவாங்கூர் அறப்போர் குறித்து இறுதியான முடிவு செய்யுமென்று அவர்கள் கூறியுள்ளனர்.

★

தி. த. நா. கா. தலைவர்

இருவார சிறைத் தண்டனை

கோட்டயம், ஜூலை 30—

தேவிகுளத்தில் தடையுத்தரவை மீறிய திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரும், சர்வாதிகாரியுமான திரு. பி. ராமசாமி பிள்ளைக்கு இன்று கோட்டயம் மாவட்ட மாஜிஸ்திரேட்டால் 2 வார சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. மாஜிஸ்திரேட் அவருக்கு 'ஏ' வகுப்பு அளிக்கும்படி சிபார்சு செய்தார்.

ராஜீய உறவுகள் முறிகின்றன!

இந்திய, கோவா அரசுகளின் நடவடிக்கை

இரு நாட்டு தூதுவர்களுக்கும் வெளியேற்ற உத்தரவு

கோவாவில் ஊரடங்குச் சட்டம்?

புதுடில்லி ஜூலை 30—

பம்பாயில் உள்ள போர்ச்சுகீசிய கான்சல்-ஜெனரல், கான்சல் இவர்களின் அங்கீகாரத்தை வாபஸ் பெறுவது என இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

இந்த அதிகாரிகள் பம்பாயிலிருந்து ஜூலை 31-ந் தேதி மாலை 6 மணிக்குள் புறப்பட்டுவிட வேண்டும்; ஆகஸ்டு 1-ந் தேதி நடுப்பகல் 1 மணிக்குள் இந்திய எல்லையைத் தாண்டிவிட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது

கோவாவில் உள்ள இந்திய கான்சல்—ஜெனரல் மற்ற கோவாவில் உள்ள கான்சல் இருவரின் அங்கீகாரத்தையும் வாபஸ் பெற போர்ச்சுகீசிய சர்க்கார் செய்த முடிவிற்கு இது பதில் நடவடிக்கையாகும்.

கோவாவில் உள்ள இந்திய கான்சல் வின்சன்ட் கோயல்கோ, மர்ம கோவாவில் உள்ள உதவி கான்சல் ஏ பிரபு இருவருடைய நடவடிக்கைகளும் போர்ச்சுகீசிய இந்தியப் பிரதேசங்களின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் பெரும் அபாயமாக இருப்பதால் அவர்கள் கோவாவில் இருப்பது மிகவும் தொல்லையாக இருக்கிறதென்று போர்ச்சுகீசிய வெளிநாட்டிலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது

கோவாவில் உள்ள இந்திய தூதுவர்களை, குறிப்பிட்ட காலத்தில் புறப்படுமாறு இந்திய சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது அவர்கள் குடும்பங்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் போர்ச்சுகீசிய சர்க்காருக்கு குறிப்பொன்றை அனுப்பியிருக்கிறது

இணைப்பு இயக்கத்தை ஒடுக்க ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து கோவாவில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடத்த கோவா சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

பம்பாயிலிருந்து வெளியாகும் மராத்தி மொழி பத்திரிகையான 'லோக் சத்தா'வை கோவாவில் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

காரைக்காலில் வரி கொடா இயக்கம்?

நாகப்பட்டினம், ஜூலை 29—

"எஞ்சியிருக்கும் பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் அதிகாரத்தை மாற்றத் தவறினால், இறுதி நடவடிக்கையாக வரி கொடா இயக்கம் தொடங்கப்படும்,"

என, பிரெஞ்சிந்தியக் கமிஷனரிடம் காரைக்கால் வணிகர் சங்கச் செயலாளர் ஏ. ராமநாதஞ் செட்டியார் அறிவித்துள்ளாராம்.

அறப்போர் ஆச்சர்யமளிக்கிறதாம்!

ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் சிபார்சுக்குக் காத்திருக்க வேண்டுமாம்!

புதுடில்லி, ஜூலை 30—

மக்கள் தங்கள் கோரிக்கைகளை அமைதியான முறையில் வெளியிட்டால் அக்கோரிக்கைகளுக்கு பெரும்பான்மையினரின் ஆதரவு கிடையாது என்பதும், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த அமைதியான கிளர்ச்சி நடத்தினால் அவை

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் எதிர்ப்பிற்கு பம்பாய் சர்க்கார் பணிகிறது!

ஆங்கில போதனை பற்றிய உத்தரவுகளை ரத்து செய்கிறது!

இந்திய உயர்நீதி மன்றத் தீர்ப்பின் விளைவு

பம்பாய், ஜூலை 30—

பம்பாய் சர்க்கார் தனது கல்விக் கொள்கையை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டது.

பம்பாய் மாணவர்கள் எந்தப் பள்ளியில் வேண்டுமென்றாலும் சேரலாம். போதனை மொழியாக எம்மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பது மாணவர்களின் விருப்பத்தைப் பொருத்ததாகும்

ஆங்கிலப் பள்ளிகள், ஆங்கில போதனை பற்றிய பம்பாய் சர்க்காரின் முந்திய உத்தரவு இந்திய உயர்நீதி மன்ற தீர்ப்பினை ஒட்டி ரத்து செய்யப்பட்டது.

பள்ளிகளிடையே வேற்றுமை காட்டாது எல்லாப் பள்ளிகளுக்கும் பம்பாய் சர்க்கார் அங்கீகாரமளிக்கும்.

இச்செய்தியை பம்பாய் கல்வி அமைச்சர் தினகர்ராவ் தேசாய் நிருபர்கள் கூட்டமொன்றில் கூறினார்.

ஆங்கிலப் பள்ளி ஒன்று மாணவர்களை அனுமதிக்க முடியும் என்றும், ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக எதுவும் செய்யப்படமாட்டாது என்றும் தினகர்ராவ் தேசாய் மேலும் கூறினார்.

முடிவு செய்வார்களாம்?

சென்னை, ஜூலை 29—

தமிழரசுக் கழகத்தில் இருப்பவர்கள் காங்கிரசிலும் அங்கம் வகிக்கக்கூடாது என பதினைந்து நாள் தவணை தந்து தமிழரசுக் கழகத்திற்கு தமிழ் நாடு காங்கிரஸ் தாக்கீது பிறப்பித்திருக்கிறதல்லவா? அதுபற்றி தமிழரசுக் கழகத்தார் ஜூலை 8-ம் தேதியன்று முடிவு செய்வார்கள் என்று தெரிகிறது.

கால்வாய் தண்ணீர் பிரச்சினை

பாக். உலக பாங்கியிடம் செல்கிறது!

கராச்சி, ஜூலை 30—

இந்தோ-பாகிஸ்தான் கால்வாய் தண்ணீர் பிரச்சினை பற்றி உலக பாங்கிக்கு பாகிஸ்தான் சர்க்கார் குறிப்பொன்றை அனுப்பியிருக்கிறதாம்.

குறிப்பிலுள்ள செய்தி என்னவென்று தெரியாவிட்டாலும், உலக பாங்கி தயாரித்துள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தண்ணீர் பிரச்சினைக்கு விரிவான திட்டமொன்றைத் தயாரிக்க உலக பாங்கியுடன் ஒத்துழைக்க தன்னுடைய ஒப்புதலைத் தெரிவித்திருக்கிறது.

ஆனால் வருங்காலத்திட்டமானது, பாகிஸ்தான் தனது உள்நாட்டு அபிவிருத்தி தேவைகளுக்கென்று எவ்வளவு தண்ணீர் தேவை என்று நிர்ணயித்திருக்கிறதோ அதற்குப் பாதகமாக இருக்கக் கூடாதென்று தெரிவித்திருக்கிறதாம்.

சினிமாக் காட்சி அல்ல!

★

நேருபண்டிதரின் தங்கை விஜயலட்சுமி அம்மையாரை, கிருஷ்ண மேனன் ஜெனிவாவில் வரவேற்கும் காட்சி.

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 31—7—54 சனி

அஜ்மீர் மேளா!

"பாழடைந்த இந்த வீட்டை இடித்து புதிய மாடி வீடு கட்டப்போகிறேன்! ஆனால், அந்த மாடி வீட்டிலும் ஓட்டை, ஒழுகல் இருக்கத்தான் செய்யும்!!"

இந்த இரண்டு முடிவுகளையும் ஒரே நேரத்தில் கூறுபவனைப் பற்றி என்ன எண்ணுவது?

* * *

"ஒழுக்கத்தின் சொரூபம் ஆண்டவன்; அவன் நாமத்தைப் பஜியுங்கள்!" என்று கூறி, பகவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே பக்தர்கள் கொடுக்கும் காணிக்கையைப் பெற்றுக்கொண்டு, தனியிடம் சென்றபின் "எங்கே என் சிங்காரி!" என்று கதறி, அவளிடம் சல்லாபம் செய்பவனை கபட வேடதாரி என்று கூறாமல் 'மஹா சந்நிதானம்' என்று கூற முடியும்?

* * *

சமீபத்தில் அஜ்மீரில் கூடிக் கலைந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், நாட்டிலே நாள்தோறும் தேசியத் தோழர்கள் பேசும் பேச்சுக்களையும் கவனித்தால் மேற்கண்டவைகளைப் போல்தான், உதாரணங்கள் நம் கண் முன் வருகின்றன.

அஜ்மீரில் கூடியவர்கள் பொருளாதாரத்திலே, சோஷலிசத்தையும், கூட்டுறவு முறையையும் அனுஷ்டிப்பதே தங்கள் கொள்கை என்று கூறினர்.

ஆனால் தனிப்பட்டவர்களின் வியாபாரத்திற்கு ஊறு செய்யும் வண்ணம் எதுவும் செய்ய மாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கின்றனர்!

பெரும் பெரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதே தங்கள் நோக்கம் என்றனர்.

அதே நேரத்தில் கைவேலை குடிசைத் தொழில்கள் அத்தனையையும், மற்ற பழுத்துப்போன குடிசைத் தொழில்கள் அத்தனையையும் காப்பாற்றுவதற்கு பணம் ஒதுக்கத் திட்டம் தீட்டினர்!

புதிய, புதிய விஞ்ஞான சாதனங்கள் தேவை என்று கதறினர்!

ஆனால் அப்படிப்பட்ட விஞ்ஞான இயந்திரங்கள் வந்தவுடன் ஏற்படக்கூடிய, பெருத்த வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுக்க வழிதேட மறந்தனர்!

தொழில்களைத் தேசிய மயமாக்க மறுத்தனர்; ஆனால் இருக்கின்ற முதலாளிகள் நல்ல மனது பெறவேண்டுமென வாதிட்டனர்!

இப்படி முற்றிலும் நேர் எதிரான கொள்கைகளை வாரிக் கொட்டி, மக்களை இன்னும் குழப்பமான நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கின்றனர், அஜ்மீரில் கூடியவர்கள்!

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, எல்லோருக்கும் வேலைதேடித் தரும்போவதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றிய காங்கிரஸ் கமிட்டி, அதை எப்படிச் செய்வது என்பது பற்றி எள்ளளவும் விளக்கியதாகத் தெரியவில்லை!

வளர்ந்து கொண்டே இருக்கும் இந்திய உபகண்டத்து மக்கட் தொகைக்கு எந்தவிதமான திட்டம் தீட்டி காங்கிரஸ் கமிட்டி வேலைதர நினைக்கிறது?

நாட்டிலே எல்லோரும் நல் வாழ்வு அடைய செல்வப் பெருக்கு வேண்டும்; ஆனால் அந்தச் செல்வப்பெருக்கு ஏற்பட, இருக்கின்ற செல்வம் சீரழிக்கப்படாமலிருக்கவேண்டும். இதற்கு காங்கிரஸ் கமிட்டியின் திட்டம் எதுவுமே தென்படவில்லை. ஆனால் பொது மக்கள் கண்ணை மறைக்க, மிகப் பெருமையாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம் என்று கூறிவிட்டனர்.

"நச்சுப் பாம்பே, உன் நஞ்சை கக்கிவிடு!" என்று கூறுவதைப்போல், முதலாளிகள் தேசிய மனப்பான்மையோடு தொழில் புரியவேண்டுமென கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நேரு பண்டிதர் பெருமையாகப் பேசிய சோஷலிச — கூட்டுறவுக் கொள்கைக்கு நேர் எதிரான வேண்டுகோள் இது என்பது ஒருபுறமிருக்க, புறம்பாடலும், முதலாளிகளின் லாப நோக்கை எப்படி மாற்ற முடியும்? முதலாளிகளே லாபம் திரட்டத்தானே தொழில் செய்கின்றனர்!

முதலாளிகள் திறம்பட தொழில்செய்ய ஆரம்பித்தால், பல்வேறு தொழில் துறைகளிலும் ஒரு சில குறிப்பிட்ட பணமூட்டைகளிடம் நாட்டின் பொருளாதாரம் பிடிபடும். அதன் முடிவு மக்களாட்சி நசுக்கப்பட்டு, தொழிலாளர்கள் அடக்கப்பட்டு, பேரா சொரூபத்துடன் முதலாளித்துவ ஆட்சி வெளிப்படும்.

தனிப்பட்ட முதலாளிகளை விட்ட ஒவ்வொரு கட்டிலும் இந்த மாறுபாட்டைத் தானே காண்கிறோம்!

இன்று, நாட்டிலே, பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஒரு சில முதலாளிகளிடம் பணம் போய் குவிந்து கொண்டிருக்கிறது. தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைக்கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல், கடன் பட்டவர்களாய் பெரும்பாலோர் சென்று கொண்டிருக்கும் நேரத்தில், முதலாளிகள் லாபக் கணக்கைப் பெருக்கிக்கொண்டே செல்கின்றனர்.

பெரும் ஆலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றிய காங்கிரஸ், அந்த ஆலைகளுக்கு எங்கிருந்து மூலதனம் தேடுவது என்பதைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை.

மக்களுடைய உதவியும், உற்சாகமும் எப்பொழுது கிடைக்கும்? ஆண்டான் — அடிமை நிலை ஒழிந்து, உழைத்தால் நமக்கும், நாட்டுக்கும் ஏற்றம் கிடைக்குமென்று நம்பிக்கைக் கிடைத்தால்தானே, மக்கள் முழுமூச்சோடு செயலாற்றத் தொடங்குவர்?

உழைத்தோம் — கூலிபெற்றோம் என்ற நிலையில் தொழிலாளிகள் காலத்தைப் போக்கவும், ஆண்டு முடிவில் லாபக் கணக்கைப் பெருக்கிக்கொண்டே முதலாளி செல்வமான நிலை நீடிக்குமானால், அறியாமையில் ஆழ்ந்த மக்கள் அவதிகளைப் பொறுத்துக் கொண்டிருப்பர்; அறிவுத் தெளிவுள்ளவன் எரிமலையாவான்.

இந்த உண்மைகளை நன்கு உணர்ந்தவர் போல்தான் நேரு பண்டிதர் சோஷலிச-கூட்டுறவு பொருளாதார முறைதான் நாட்டுக்குத் தேவை என்கிறார். நாமும் ஒத்துக் கொள்கிறோம்.

ஆனால் பதவியிலிருப்பவர்கள் செயலாற்ற வேண்டிய நேரத்தில், மக்களை மயக்க இந்த சுலோகங்களைக் கூறிவிட்டு, அதற்கு நேர் எதிரான திட்டங்களையே தீட்டுகின்றனர்.

இன்று நாட்டிலே செய்யப்பட வேண்டிய முதல் சீர்திருத்தம் தொழில்களை தேசிய மயமாக்க வேண்டும்; நிலங்களை பொதுச் சொத்தாக்க வேண்டும்.

இந்த இரண்டும் செய்யாமல் இருக்கின்ற முதலாளி, 'இருக்கிறபடியே இருக்கட்டும்; நாம் வேறு தொழில்கள் ஆரம்பிப்போம்,' என்ற பாதையில் போனால், நிச்சயம் முதலாளித்துவ பொருளாதார ஏற்றத் தாழ்வுகளில் சிக்கிச் சீரழிவு அடைய வேண்டியதுதான். வரலாறு கற்பிக்கும் பாடம் இது!

இப்படி ஒன்றுக்கு ஒன்று முரணான கருத்துக்களைப் பேசி, பேச்சுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாமல் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றனர், அஜ்மீரில் கூடியவர்கள்!

அஜ்மீர் காங்கிரஸ் நடந்த முறை "மேளா" உற்சவம் மாதிரி பாவித்ததென்றும், அதிலே அரசியல் பிரச்னைகள் குறைந்து, கேளிக்கைகள் நிறைந்து விட்டதென்றும், அந்த கமிட்டிக் கூட்டத்தின் முடிவுகளைப்போது நேரு பண்டிதர் கூறியிருக்கிறார்.

அவர்கள் போட்ட தீர்மானங்களும், பேசிய பேச்சுக்களும், பலதிறப்பட்ட மக்களையும் திருப்தியடைந்த 'மேளாவில்' கடை போடுபவர்களைப் போலதான், ஆகிய இந்த 'மேளா' நடத்தினார்கள், அஜ்மீரில், என்று எண்ண வேண்டியிருக்கிறது!

இரத்தக் கண்ணீர்

[ஒரு உரையாடல்-2]

(ஒற்றன்)

[யார் யாருடன் பேசியது, எப்போது, எங்கே பேசியது என்பது முக்கியமல்ல. கற்பனைதான். ஆனால், நிலைமைக்குப் பொருத்தமான உரையாடல் அல்லவென்று கூற முடியாது.]

(நேற்றைய தொடர்ச்சி)

பொது மக்கள், நாம் முன்பு பேசியதையும் இப்போது பேசுவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், உண்மை தெரிந்து விடாதா...

ப்பூ! இதுதான் மக்களுக்கு வேலையாக்கும்! ஒப்பிட்டுப் பார்ப்பார்களாம், ஒப்பு இட்டு!! சிலர், ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் என்றே வைத்துக் கொள்—அதுகளை உதவாக்கரை என்று கூறிவிட்டுப் போவது.

★

படித்தவன்! பட்டதாரி!!

பேச்சு முதல் தரம்! எழுத்தும் அப்படித்தான்!!

விரும்பியிருந்தால், நல்ல நல்ல உத்தியோகம் கிடைத்திருக்கும்!!

உழைக்கிறான், ஊரார் மனதை மகிழச் செய்கிறான், சிறையும் சென்றுவந்தான்!

நாடகம் தீட்டுகிறான், நடிக்கவும் செய்கிறான், பகுத்தறிவுக்குப் பணியாற்றுகிறான்!!—என்று முன்பு சொன்னோம்—நம்மோடு இருந்த போது—அப்போது!!

★

படித்த கூட்டத்தான்!

பகட்டுக்காரன்!

அடுக்கு மொழி பேசி ஆளை மயக்குகிறான்!

வேலை கிடைக்காததால், பொது வாழ்விலே நுழைந்து பொறுக்கித் தின்கிறான்!

பவுடர் பூசிப் பசப்புகிறான்!

கூத்தாடி ஆள் சேர்க்கிறான்! ஆள் சேர்த்துக் காசு திரட்டுகிறான்!!—என்று இப்போது பேசுவது! அழுத்திக் கூறவேண்டியதுதானே!! நம் புத்தாளர்கள் நம்பட்டும்-நம்பவே மாட்டார்கள் என்றுகூட வைத்துக்கொள்—மேக்கு ஒரு அலாதி திருப்தி, மகிழ்ச்சி, ஏற்படுகிறதல்லவா, அதுபோதும்—ஆகவே இனி கலைக்கூடு, காரித் துப்பு, வண்டவாளங்கள் கேளீர் என்று முழக்கமிடு, முன்பின் இருந்ததை எல்லாம் எண்ணிப் பார்க்காதே, ஒட்டு உறவு பற்றி எண்ணாதே, எவ்வளவோ நேசமாக பழகித்தான் இருந்தோமே என்பதை எல்லாம் எண்ணிக் குழப்பமடையாதே, பச்சாதாபம், பரிவு போன்ற கெட்ட நினைப்புகள் கிளம்பினால், உடனே, என் எழுத்தோவியங்களைப் படி, பார்! பிறகு! ஆற்றல் உனக்கு ஊற்றெடுக்கும்! வசை மொழி பொங்கும், வழியும்! நீதி, நேர்மை போன்ற அற்ப உணர்ச்சிகள் பறந்தோடும்! ஆபாசக் கதைகள், அடுக்காத பழி மொழிகள், அடுக்கடுக்காகக் கற்பனையில் கிளம்பும்! இது நெருக்கடியான கட்டம்—மிகவும் நெருக்கடியானது—கொசுக்கடி அல்ல, கொசுகூட அல்ல, நமது பகைக்கும் எதிர்ப்புக்கும், சாபத்துக்கும் கோபத்துக்கும் தம்பி, நாட்டிலே தழைத்துவிட்டிருக்கும் போசபத்து—நாடோ, அதைத் திராவிடச் சம்பத்து என்று சொந்தம் கொண்டாடுகிறது—ஒன்று இதுகளை ஒழிப்பது இல்லையேல், நாம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேளாமல், இதுகளுக்கு ஆதரவு அளித்து வரும் இந்த நாட்டையாவது ஒழிக்க வேண்டும்!

நல்ல யோசனை...!

வேறு, என்ன செய்வது..?

நாம் வளருவது—நமது கட்சி வளருவதற்கான வழிவகைகளில் கவனம் செலுத்துவது...

இப்போது செய்யாமலா இருக்கிறோம்? எங்கே செய்கிறோம்? நமக்குத்தான் சதா

(3-ம் பக்கம் பார்க்க)

"அலட்சியம் செய்யவில்லை!"

மெண்டஸ் பிரான்ஸ் கூறுகிறார்!

புதுவை ராடிகல் சோஷியலிஸ்ட் கட்சியின் தலைவர் இராமசாமி என்பவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ் "நான் பிரெஞ்சிந்தியப் பகுதிகள் பற்றி அலட்சியமாக இல்லை," என்று கூறியுள்ளார்.

பதனீரைப் பாதுகாக்கும் முறைகள்

மைசூர் உணவு ஆராய்ச்சிக் கழகத்தினர் கண்டுபிடிப்பு

மைசூர், ஜூலை 30—

மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தினர் பதனீரை அதன் குணம், மணம் இவைகள் எதும் கெடாமல் 48 மணி நேரத்திற்கு வைத்திருக்கும் வழி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் நடந்த இரண்டாண்டு கால ஆராய்ச்சியில் பதனீரை ஒரு வாரம் வரையில் கெடாமல் பாதுகாக்கும் முறைகளையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பதனீருடன் சிட்ரிக் ஆஸிட் என்னும் வஸ்துவைக் கலந்து வைத்து 48 மணி நேரம் பத்திரப்படுத்தலாம் என்று தெரிகிறது.

இதன் மூலம் பதனீர் புளித்துப் போகாது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சிறிது நேரம் பதனீரை கொதிக்கவைத்து பின்னர் நல்ல முறையில் பாதுகாத்தால் பதனீர் கெடாது என்றும், இதன் மூலம் பதனீரின் மணத்தில் சிறிதளவு வித்தியாசம் ஏற்படும் என்று தெரிகிறது. மீண்டும் அது புளித்துப் போகுமென்று தெரிந்தால் மறுமுறையும் சூடாக்கி வைத்துக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

காற்றுப் புகாத பாத்திரங்களில் பதனீரைக் காய்ச்சி 'ஷர்பத்' போன்ற கண்ணாடி புட்டிகளில் அடைத்து வைத்திருந்து, பின்னர் தேவைப்படும்போது தண்ணீர் கலந்து குடிக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்; ஆனால் இம்முறையில் அதிகம் செலவாகுமென்று தெரிகிறது.

நாலணாவிற்கு சோதிடன் குறிக்கும் நாள்!

வாழ்வை நிர்ணயிக்கும் வல்லமை உடையதா?

அறிவு வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவில் சம்பத்

சென்னை ஆயிரம் விளக்கு அறிவுவளர்ச்சி மன்ற முதலாம் ஆண்டு விழாவில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை 29—7—54 இதழில் தந்திருந்தோம். இதர பகுதி கீழே தரப்படுகின்றது:—

"நாம் பிற நாட்டார் கண்ட அறிவின் கனிகளை தினம் தினம் சுவைக்கிறோம்; அன்னாடம் அவர்கள் காணும் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் அனுபவிக்கத் துடிக்கிறோம்; அதே நேரத்தில் பழைமையைக் காப்பதற்காகவும் பாடுபடுகிறோம்; உயிர் பலி கூடத் தருகிறோம்; பழைமையிலிருந்து புதுமைக்கு அழைக்கிறவர்களின் உயிரையும் குடிக்க எண்ணுகிறோம். இது சரியா?

நாட்டிலே பொது அறிவு வளர்த்தாக வேண்டும் என்பதற்காகத் தான் தி. மு. கழகம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

இன்று நாட்டிலே வரும் பத்திரிகைகளைப் பாருங்கள்—மனிதனின் மானம் போகிறதே! எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் மாத சோதிடம், வார சோதிடம் தினசரிப் பலன், ராசி பலன் இப்படியாக சோதிடப் பகுதிகள் இந்த நாட்டின் எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெற்றிருப்பது எதைக் காட்டுகிறது?

இந்த நாட்டில் உள்ள முட்டாள்களின் தொகை என்ன என்பதைத்தானே காட்டுகிறது? ராசி பலன் பார்ப்பது மனிதனின் கோழைத்தனத்தை, பலவீனத்தை எடுத்துச் சொல்லவில்லையா, என்ன?

கன்யா ராசிக்காரனுக்கு இன்ன பலன், மேஷ ராசிக்காரனுக்கு இன்ன பலன் என்று எதையோ எழுதி வைக்கிறான்—அதைப் பார்க்கிற இந்த மனிதன், அதில் எழுதியுள்ள மாதிரி ஏதேனும் தனக்கு நிகழாதா என்று எதிர்நோக்குகிறான்; அப்படி இந்த சோதிடத்தாலே அவன் ஒத்துழைக்கிறான்; தான் சோதிடனுக்குத் தருகிற ஒத்துழைப்பை டாக்டருக்கும் வக்கீலுக்கும் தர மறுக்கிறான்.

பிழைக்கிற சோதிடனுக்கு சோதிடம் பார்ப்பவன் மீது இருக்கிற அக்கரையைக் காட்டிலும், சோதிடம் பார்த்துக் கொள்கிற இவனுக்கு சோதிடம் சொல்பவன் சொல்கிறமாதிரியில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதில் அக்கரை இருக்கிறது.

மனிதனின் இந்தச் செய்கைக்குக் காரணம் என்ன? அறிவின்மையும், தெளிவின்மையும் தானே!

ஆயிரந் துறைகளில் ஒருவன் புத்திசாலியாயும், வீரனுமிருந்தாலும் இந்த ஒரு துறையில் அறிவிலியாயும், கோழையாயுமாகிவிடுகிறான்.

படைகள் பல வென்று, பல நாடுகளை அடக்கி ஆளும் மன்னனுக்கூட இருப்பான்; ஆனாலும், பூனை குறுக்கே போனாலும் சகுனத் தடை என்பான்; ஒற்றைப் பார்ப்பான் தெருவில் வந்தால் சகுனம் சரியில்லை என்பான்; இவற்றை மனதில் கொண்டு மனிதன், தனது வீரத்தைப் பலியிடுகிறான்; கோழையாகிறான்.

பலர் இந்த நாட்டில் பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்து வைப்பதற்கு நாளும் நட்சத்திரமும், நல்ல வேளையும் பார்த்து முகூர்த்த வேளை நிச்சயிக்கிறார்கள்; அந்தக் குறிப்பிட்ட வேளையில் தாலி கட்டியாக வேண்டுமென்று அடித்துப் பிடித்துப் போகிறார்கள்.

அவர்களுக்குச் சொல்கிறேன்—கல்யாணம் செய்து கொள்கிறவர்களின் வாழ்வு, நாலணாவுக்கு, சோதிடம் பார்த்துக் குறித்துத் தரும் கடிகார முள்ளின் அசைவிலேதான் இருக்கிறதென்று நினைப்பதைக் காட்டிலும் பைத்தியக்காரத்தனம் வேறெதுவுமில்லை.

உங்களுக்குச் சொல்கிறேன்—அந்த சோதிடனின் முப்பாட்டனுக்கும், பாட்டனுக்கும் குருவான பெரும் மாமுனிவர்கள், ரிஷிகள் எனப் போற்றப்படுகிற ஜனகனும், வசிஷ்டனும் விசுவாமித்திரனும் பார்த்துக் கணக்கிட்டுத் தந்த 'நல்ல' முகூர்த்தவேளையில் திருமணம் செய்துகொண்ட ராமனும், சீதையும் வாழ்ந்தார்களா சுகமாக? அந்த 'ராஜ ரிஷிகள்' பார்த்துத் தந்த முகூர்த்த வேளையில் திருமணம் செய்துகொண்டதின் விளைவு என்னவாயிருந்தது?"

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், ராமன்—சீதை கல்யாணம் முதல், சீதையின் பாதாளப் பிரவேசம் வரை—ராமன் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிற வரை—விளக்கமாக, அவர்கள் இருவரும் கல்யாணமான நாளையில் தொல்லியுள்ளபடி அடைந்த துன்பங்கள் அத்தனையையும் எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர், 'கும்பமேளா' நடத்தியவர்கள் இந்தியாவிலேயே மிகப் பெரும் ஜோதிடர்கள் என்று குறிப்பிட்டு, கும்பமேளா என்றால் என்ன என்பதை நகைச்சுவைபட எடுத்துக் கூறி, தென்னாட்டிலும், 'கும்பமேளா'வின் 'கிளை'யாகக் கும்பகோணத்தில் 12 வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் மகாமகத் திருவிழா பற்றிக் குறிப்பிட்டு, அந்த விழாவிலே கலந்துகொள்கிற பக்தர்கள், ஒரே நாளில் 'புண்ணியங்கள்' அத்தனையையும் அடைந்துவிடுவதற்குக் கொண்ட பேராசையும், மாமாங்கக் குளத்தில் மூழ்கி எழுந்தும் 'பாவம் போகாமல்', தாங்கள் செய்துள்ள பாவங்கள் குறிக்கப்படாதென்று எண்ணும் அறிவின்மையையும் இடித்துக் காட்டினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாம் இப்படி மனித அறிவை இழந்து, கோழையாய் மாறிச் செய்யும் காரியங்களைக் கண்டிப்பது, மனிதன் அறிவுள்ளவனாய் மாறவேண்டும் என்பதற்காகத்தானே அன்றி, எந்த ஒரு வகுப்பாரையும் துவேஷிக்கவேண்டுமென்பதற்காக அல்ல! இந்த மூடப் பழக்கங்களை மக்கள் மேற்கொள்வதின் மூலம் வயிறு வளர்க்கும்—சோம்பிப் பிழைக்கும் சிலர் துடிக்கிறார்கள்; எம்மை நாஸ்திகர்கள் கடவுளை நிந்திப்பவர்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

நாம் இத்தகு பழக்கங்களைக் கண்டிப்பதன் காரணம் எல்லாம், மக்களின் முன்னேற்றத்தின் கடவுளின் பெயரால் மண் தூவப்படுகிறது என்பதனால் தான் அன்றி வேறெதற்காகவும் அல்ல!

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை ஆராய ஒரு கட்சி தேவை இல்லையே! ஒரு சாறு, காய்ந்த புல்லை ஐந்து ஞானிகள் இருந்தால் போதுமானது—அந்த ஆராய்ச்சி செய்ய!

நாம் ஒரு பெரும் கட்சியாக இருந்து இந்தப் பணியை மேற்கொண்டிருப்பதின் காரணம், கடவுளை பயங்கர ரூபங்களில் சித்தரித்து மனிதனைப் பயப்படச் செய்து, கடவுட்தன்மைகளுக்குப் புறம்பான விளக்கங்களைத் தந்து, பாப புண்ணியங்களைக் கற்பித்து, அவனைக் கோழையாக்கி, அறிவிழக்கச் செய்து அவனை ஏமாற்றி சிலர் வயிறு வளர்ப்பதின் மூலம் சமுதாயத்தின் மொத்த முன்னேற்றம் பாழ்படுகிறது என்பதினால்தான்!

மனிதனை இந்த கடவுள்களும், மதங்களும், இவைபோன்றவும் சுயாலோசிக்கவிட்டன.

இன்று நாட்டில் சமுதாயப் பற்று, நாட்டுப் பற்று, கூட்டுணர்வு, அன்பு இவைகளுக்கெல்லாம் பஞ்சம் ஏற்படச் செய்துவிட்டன.

'வாழ்வே மாயம்' என்ற சாஸ்திர புராண போதனைகள் மனிதனுக்குக் கூட்டு மூயற்சியில் நம்பிக்கையற்றுப் போகச் செய்துவிட்டிருக்கின்றன. தனி மனிதனின் பேராசையை ஊக்குவித்து அவனுக்கு நாட்டுப் பற்றும், சமூகப்பற்றும் இல்லாது போகச் செய்துவிட்டன; ஆகவே தான் நாம் அவற்றைக் கண்டிக்கிறோம்," என்றார்.

மேலும் தோழர் சம்பத் அவர்கள், மக்கள் அறிவு பெற்றவர்களாக, சிந்திக்கும் திறனும், துணிவும் கொண்டவர்களாக மாறினால்தான் நாடு நலம் பெறும்; அதற்காக இத்தகு அறிவு வளர்ச்சி மன்றங்கள் பாடுபட வேண்டும் எனக் கூறி முடித்தார்.

இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் 100-க்கு ஒருவரே!

மாணவர்கள் பண்பு பற்றி இந்திய சர்க்கார் ஆராய்ச்சி

சென்னை, ஜூலை 30—

இந்திய சர்க்காரின் கல்வி இலாகா, மாணவர்களின் விளையாட்டு பொழுதுபோக்கு பற்றிய சர்வேயை தயாரித்துள்ளது. பல்வேறு மாநிலங்களின் கல்லூரியைச் சேர்ந்த 3412 மாணவர்களின் விளையாட்டுகள், பொழுது போக்கு என்ன என்பதை இந்த சர்வேயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

60 சதவீத மாணவர்கள் நாவல்கள் கதைகள் படிப்பதிலேயும், 40 சதவீத மாணவர்கள் பத்திரிகைகள் படிப்பதிலேயும் ஆர்வம் காட்டுகின்றனராம்.

தத்துவ சாஸ்திரம், மனதால் போட்டோகிராபி, கவிதைகள் சரித்திரம், இலக்கியம் படிப்பதில் 100க்கு ஒருவர் அல்லது இருவர்தான் ஆர்வம் காட்டுகின்றனராம்.

நாடக இலக்கிய மன்றங்களில் அதிக மாணவர்கள் ஈடுபடவில்லையாம்.

100 க்கு 20 பேர் விவாதங்களிலும், 100 க்கு 32 பேர் சாரணர் இயக்கங்களிலும் சிரத்தைக் காட்டுகின்றனராம்.

கவிதை எழுதுவது கடிதமூலம் சிநேகிதம் கொள்வது இவைகளில் 5 சதவீதம் முதல் 9 சதவீதம் வரை ஈடுபடுகின்றனர். 18 சதவீதம் போட்டோ ஸ்டாம்பு சேகரிப்பு இவைகளில் கவனம் செலுத்துகின்றனர்.

குத்துச்சண்டை, குதிரை சவாரி, பாஸ்கட் பந்து இவைகளில் அதிக நாட்டமில்லையாம். 70 சதவீதம் பேர் நீச்சலிலும் டென்னிஸிலும் ஆர்வம் காட்டுகின்றனராம்.

60 சதவீதம் பேர் ஹாக்கி, கிரிக்கெட், கால்பந்து ஆடுகிறார்கள். 20 சதவீதம் பேர்தான் பேட்மிண்டன் வாலிபால் ஆடுகிறார்களாம்.

பம்பாய் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

வேலை துவங்கப்பட்டுவிட்டது

பம்பாய், ஜூலை 30—

இந்தியாவில் வடநாட்டில் அமைக்கப்படுகிற மூன்று எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளில் ஒன்று வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

பம்பாய் அருகே உள்ள ட்ராம்பாக் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் 'குரூட் ஆயில்' என்னும் பண்படுத்தப்படாத எண்ணெயை சுத்தம் செய்து பெட்ரோல் முதலிய எண்ணெய்ப் பொருள்கள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

நாளொன்றுக்கு 25,000 'பாரல்' எண்ணெய் இங்கே சுத்தம் செய்யப்படும்.

இந்தியாவின் எண்ணெய் தேவையில் 30 சத வீதத்தை இத்தொழிற்சாலை அளிக்குமாம்.

ஆண்டொன்றுக்கு 296 மிலியன் காலன் பெட்ரோல் உற்பத்தியாகுமென்று தெரிகிறது.

ரூ. 17½ கோடி செலவில், 7,000 தொழிலாளர்கள் அத்தொழிற்சாலையை ஒன்றரை ஆண்டுகளில் கட்டி முடித்துள்ளனர்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

சென்னை வட்டார ஜெனரல் ஆபீசர் கமாண்டிங் மேஜர் ஜெனரல் ஜே. சி. கட்டோச், வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்கு 24—7—54ல் வருகை தந்து, பாடசாலை மிகவும் உயர்ந்த முறையில் நடத்தப் பெற்று வருவதைக் கண்டு மகிழ்ந்தார்.

இரத்தக் கண்ணீர்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

'அதுகளை' ஒழிக்கும் ஆவேசம்கிளம்புகிறதே, நல்ல திட்டங்கள், பிரச்னைகளுக்குப் புதும் புது விளக்கங்கள், போர் முறைகள், கட்டுக்கோப்பான அமைப்பு முறை, கனிவு காட்டி ஆதரவு தந்து கட்சி ஊழியர்களை அணைத்துச் செல்வது, நமது கட்சியிடம் உள்ள பெரும் சொத்தின் துணை கொண்டு, கட்சி ஊழியர்களின் கஷ்டம் போக்கும் நிலையங்கள் வைப்பது, நமது கட்சியில் உள்ள எழுத்தாளர்களின் நூற்களை வெளியிட்டு நாட்டுக்கு நல்குவது, பி. டி. ஐ செய்திகளுடன், கார்ட்டூன், தனிக் கட்டுரை, பிரத்யேக நிருபர் செய்திகள் இவைகளுடன் தினசரி வெளியிடுவது, ஆங்கில வார இதழ், தின இதழ் வெளியிடுவது, நமது கட்சி முன்னணி வீரர்களை, பர்மா, மலாயா, சிலோன், இந்தோனேஷியா, இந்தோ-சைனா போன்ற இடங்களுக்கு அனுப்பி, உலகப் பொது அறிவு திரட்டி வரச் சொல்வது, தனி நாடு கேட்கும் மற்றவர்களைக் கண்டு பேசிக் கருத்தறிவது, பகுத்தறிவு பரப்பும் நாடக மேடை அமைத்து நமது கட்சிப் பற்றுள்ள நடிகர்களைப் பயன்படுத்துவது, நல்ல காதை, நாடு விரும்பும் காதை, இலட்சம் ரூபாய் வரையில் எந்த சினிமா முதலாளியும் பணம் தர முன் வரக்கூடிய அழகு நடையில் எழுத வல்ல நம் கட்சி எழுத்தாளரின் கதையைக் கொண்டு, தனி முதலாளி கொழுக்க விடாமல், கட்சியே படமாக்கி, கிடைக்கும் இலாபத்தைக் கட்சிக்குச் சேர்ப்பது, சீர்திருத்த மணம், கலப்புத் திருமணம் ஆகியவைகளைப் பெருமளவு பரப்ப, அமைப்பு ஏற்படுத்துவது, பகுத்தறிவு கண்காட்சிகள் நடத்துவது, பெரியாரின் அறிவியக்க ஏடுகளை தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவது, பார்ப்பனர்களை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலைமையில் உள்ளவர்களுக்கு வேறு பிழைப்பிடம் கண்டு அளிப்பது, இப்படிப் பல காரியங்கள் செய்யலாம்—வசதி இருக்கிறது—வல்லமை இருக்கிறது—செய்தால், வெறும் பிழைப்புக்காகவே கட்சி நடத்தும் இந்தச் சிறுவர்களின் கொட்டம் தானாகப் பட்டுப்போகாதா! அதுகளின் கொட்டமும் ஒழியும், நமது திட்டமும் வெற்றிபெறும், நாமும் உருப்படுமே—இதைச் செய்வதை விட்டுவிட்டு, அதுகளைக் கண்டபடி தூற்றிக் கருவறுக்கக் கிளம்புவது, நமது நிலைமைக்கும், நாடு நமக்கு அளித்துள்ள அந்தஸ்துக்கும் ஏற்றதாகுமா!

★

தூ! தூ! தூத் தூ தூ!! நீயும் கெட்டுவிட்டாய்—கண்ணீர்த் துளி ஆகிவிட்டாய்—எனக்கு யோசனை கூறத் துணிந்துவிட்டாய்—அவ்வளவு அன்பா அந்த அரை மஜனிடம்......

அரை மஜனிடம் அன்பு என்பதல்ல, நமது கட்சியிடம் அவ்வளவு அன்பு. பெரிய காரியத்தைச் சாதிக்கும் வசதியைக் குவித்து வைத்திருக்கிறோம், வீணாக அந்த 'விஷமோகாதருகளை' விரட்ட வேலை. செய்ய வேண்டும் என்றால், எனக்கு, துக்கமாகவும் இருக்கிறது வெட்கமாகவும் இருக்கிறது...

துக்கமா...! துக்கமாகவா இருக்கிறது...

ஆமாம்......!

சந்தேகமே இல்லை! நீ, கண்ணீர்த்துளி தான்! அதோ, கண்ணில் நீர் ததும்புகிறதே!!

ஆமாம்—வேறு என்ன செய்வது, இப்படியும் நமது நிலைமை ஆகிறதே என்று எண்ணினால், இரத்தக் கண்ணீர்தான் வருகிறது.

உலக அரங்கில்

நக்குரு (கெனியா)

ஜபசந்த் சிங் என்ற ஒரு இந்திய தொழிலாளி, அனுமதியில்லாது இரண்டு ரவுண்டு குண்டுகள் வைத்திருந்தார் என்ற குற்றத்திற்கு ஆறு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். இப்படித் தண்டனை பெறுவோர்களில் ஆப்பிரிக்கரல்லாதாரில் இவரே முதல் நபராம்! தனது இத்தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள இவருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறதாம்.

★

வெல்லிங்டன் :

இன்றைய சூழ்நிலைகளின் 'இந்தோ-சீன ஒப்பந்தம்' சமாதான ஒன்றுகூட அது கம்யூனிஸ்ட் முன்னேறுவதற்கு வழிவகைகள் செய்வதாகவும், தாய்லாந்து, பர்மா, மலேயா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் நிலவுகிற பீதியை அதிகப்படுத்துவதாகவும் இருப்பதாக நியூசிலாந்து வெளிநாட்டு இலாகா மந்திரி, 'வெப்' கூறினார்.

★

டப்ளின் :

புதுடில்லியிலிருந்து வரும் 'சங்கர்ஸ் வீக்லி' நடத்திய குழந்தைகள் படப் போட்டியில் பரிசு பெற்ற பத்து ஐரிஷ் குழந்தைகளுக்கு இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதர் எம். ஜி. தேசாய் பரிசுகள் வழங்கினார். பரிசு பெற்ற குழந்தைகள் தேசாய்க்கு மாலையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததுடன் அவரை அயர்லாந்திற்கு வருமாறும் அழைத்தனர்.

பாரிஸ் :

பிரெஞ்சு நாட்டில் சமூக பொருளாதாரத் துறையில் மெண்டஸ் பிரான்ஸின் புதிய கொள்கைகளை பிரெஞ்சு மந்திரிசபை ஏற்றுக்கொண்டுவிட்டது. பெரும்பான்மையோர் குழுவின் டாப்பினைக்கு அவை அனுப்பப்பட்ட பின் மக்கள் சபையின் விவாதத்திற்குப் பிறகுதான் அமுலுக்கு வருமாம்.

★

கான்பெர்ரா :

தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், ஆஸ்திரேலியா, மலேயாவில் தனது துருப்புகளைத் தங்க வைக்கவும், மாயாவிலிருந்து சிங்கப்பூருக்கு ஒரு யுத்தப் பிரிவு இராணுவத்தை மாற்றவும், மலேயா பகுதியில் கடற்படை தளங்களை அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

★

லண்டன் :

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இங்கிலாந்து தொடர்ந்து பொருளாதார உதவி செய்து கொண்டிருக்கும் என்று வெளிநாட்டு மந்திரி ஈடன் அறிவித்தார்.

* * *

புரைமி சோலையின் பாலைவன யுத்தத்'தை முடிவுக்கொண்டுவர ஜெட்டாவில் ஆங்கிலோ-அரேபிய நாடுகளுக்கிடையில் ஒப்பந்தமொன்று கையெழுத்தாகி இருப்பதாக இங்கிலாந்து வெளிநாட்டிலாகா அறிவித்தது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் 20 பேர் மரணம்

லெபனனில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

துண்டுப் பிரசுரத்தை எதிர்த்துக் கிளர்ச்சி!

பெய்ருத், ஜூலை 30—

லெபனனின் முக்கிய நகரமான பெய்ருத்தில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 20 பேர் மரணமடைந்தனர் என்று தெரிகிறது.

'மரக்கியும் சுதந்திரமும்' என்ற தலைப்பில் வெளியான துண்டுப் பிரசுரம் ஒன்று முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தியதாம். அதன் காரணமாக ஆத்திரம் கொண்ட முஸ்லிம்கள் நகரின் தெருக்களில் கம்புகளுடன் ஆயிரக்கணக்கில் திரண்டு கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கலைந்து செல்லுமாறும், அமைதியாக இருக்குமாறும் சர்க்கார் வானொலி மூலமாக கேட்டுக்கொண்டது பலன் அளிக்கவில்லை.

மாலையில் ஏற்கனவே உள்ள ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மீண்டும் ஏராளமானவர்கள் வந்து சேர்ந்துகொண்டனர்.

அவர்கள் டிராம்களின் மீது கற்களை வீசி கண்ணாடிகளை உடைத்தனர் என்று தெரிகிறது.

கலைந்துபோகுமாறு கூறிய உத்தரவை ஆர்ப்பாட்டக்காரர்கள் மதிக்க மறுக்கவே போலீசார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் 20 பேர் மரணமடைந்தனர் என்று தெரிகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

'அரக்கியும் சுதந்திரமும்' என்று வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் லெபனன் சர்க்காரைக் கவிழ்க்கும் நோக்குடன் வெளியிடப்பட்டது என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இந்தோ - சீனக் கமிஷன்

புதுடில்லியில் திங்களன்று கூடுகிறது

புதுடில்லி, ஜூலை 31—

இந்தோ - சீனப் போர் நிறுத்த மேற்பார்வைக் குழுவின் முதல் பூர்வாங்கக் கூட்டம் ஆகஸ்டு 1-ம் தேதி புதுடில்லியில் கூடுகிறது.

கூட்டத்தில் பண்டித நேரு பேசுவார். குழுவின் நடைமுறையை நிர்ணயிப்பதுதான் இந்தக் கூட்டத்தின் கடமையாகும்.

வியட்மின் சர்க்காரை பிரதிநிதித்துவம் செய்பவர் லாவோஸ், கம்போடியாவை பிரான்ஸின் முகமும் அழைக்கப்பட்டிருப்பதுடன், பிரான்ஸையும் பிரதிநிதியை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இனியா மாநாட்டிற்கு பண்டிதரின் தூதராகச் சென்றிருந்த திரு. வி. கே. கிருஷ்ணமேனன் லண்டனிலிருந்து விமான மூலம் பம்பாய் வந்து சேர்ந்தார்.

காரைக்குடி

புதுச்சந்தைப்பேட்டையில்

பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா

1—8—54 மாலை 3 மணிக்கு

தலைவர் :

அ. பொன்னம்பலனார்

பேசுபவர் :

சி. என். அண்ணாதுரை

★

மாபெரும் பொதுக் கூட்டம்

காந்தி சதுக்கத்தில்

1—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர் :

அ. பொன்னம்பலனார்

பேசுபவர் :

சி. என். அண்ணாதுரை

கழகக் கூட்டம்

★

முத்தாச்சாமிபுரம்

கழகத்தின் முன்பாக

2—8—54 மாலை 7 மணிக்கு

தலைவர் : சு. பாலகிருஷ்ணன்

பேசுபவர் :

எம். எஸ். இராமசாமி

திருவள்ளுவர் விழா

1—8—54 மாலை 6 மணிக்கு சைதை, சொருக்குப்பேட்டையில் திருவள்ளுவர் மன்றம் கழகச் சார்பில், தோழர் அ. தருமம்பாள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், மா. நன்னன், டி. வி. நாராயணசாமி, பே. நா. இன்மொழி ஆகியோர் பேசுவர்.

* * *

1—8—54 காலை 9½ மணிக்கு குலை, மாணிக்கச் செட்டித் தெரு, நகர தி.மு. கழக மனையில் தோழர் சி. எம். பரிபூரணம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மா. அரைக்கண்ணனார், ஆசி. தேவராதன் ஆகியோர் பேசுவர்.

தென்றல் நாக நிலைய ஆண்டு விழா

1—8—54 மாலை 5½ மணிக்கு சென்னை, இராயபுரம், 142-143, மல்லிச்சாமி கோவில் தெருவில் தோழர் பான்ஸ். பரமானந்தம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மா. இளஞ்செழியன், முவலை ஆர். எஸ். பாண்டியன், கே. எம். கண்ணபிரான் ஆகியோர் பேசுவர்.

மறைமலை அடிகள் நாடக மன்றம்

1—8—54 மாலை 4 மணிக்கு 152, தம்புச் செட்டித் தெரு, சென்னையில் மேற்படி மன்றத்தின் மூன்றும் ஆண்டு விழா தோழர் மயிலை சிவமுத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

முத்தமிழ் மாநாடு

1—8—54 மாலை 3 மணிக்கு சென்னை, செயின்ட் மேரி மண்டபத்தில் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, நெடுஞ்செழியன், என். எஸ். ராசேந்திரன், சி. எஸ். ஜெயராமன் ஆகியோர் கலந்து கொள்வர்.

திருந்த மசோதாக்கள்

ஜமீன் ஒழிப்புச் சட்டம், ஜமீன் நிலகுத்தகைக் குறைப்புச் சட்டம் ஆகியவற்றின் நிர்வாக சவுகரியம் குறித்து, சென்னை அரசாங்கம், மூன்று திருத்த மசோதாக்களை ஒரு தனி 'கெஜட்' மூலம் வெளியிட்டுள்ளனர்.

இரு டில்லி அமைச்சர்கள் வெளியேறுவர்!

பண்டிதர் தலையீட்டின் எதிரொலி!

★

புதுடில்லி, ஜூலை 30—

ஷிவ் சரண் குப்தா, தோழியர் சாந்தா வஷிஷ்ட் என்னும் டில்லி இராஜ்ய மந்திரிகள் இருவரும் பதவிகளை விட்டு வெளியேறுவார்கள் என்று தெரிகிறது.

டில்லி ராஜ்யத்தில் மூன்று அமைச்சர்களையும், இரண்டு உதவி அமைச்சர்களையும் நீக்குமாறும், நிர்வாகத்தில் அளவுக்கு அதிகமான பேர் இருப்பதாகவும் பண்டித நேரு டில்லி இராஜ்ய பிரதமருக்கு அறிவுரை வழங்கினாராம்!

இதனை ஒட்டியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிகிறது.

நேப்பாள அமைச்சர்

டிஸ்மிஸ் செய்யப்படுவார்?

காட்மண்டு, ஜூலை 30—

நேப்பாள சர்க்காரின் உள்நாட்டமைச்சர் தாங்க் பிரசாத் என்பவரை 48 மணி நேரத்தில், தன்னுடைய பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று பிரதமர் எம். பி. கொய்ராலா உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

அவர், தான் இராஜினாமா செய்யப் போவதில்லை யென்றும், வேண்டுமானால் தன்னை டிஸ்மிஸ் செய்து கொள்ளலாம் என்றும் கூறுகிறார்.

இச்செய்தியை 'சமாசார்' என்னும் இதழ் வெளியிட்டிருக்கிறது.

தி. மு. கழக உறுப்பினர் நால்வர் மீது வழக்கு

மும்முனைப் போராட்ட நாள் எதிரொலி

சென்னை, ஜூலை 29—

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை தி. மு. கழக தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், பன்மொழியன், கிருஷ்ணசாமி, வனவர்மன் ஆகியோர் மீது எழும்பூர் நெ. 3 போலீசார் நகர போலீஸ் சட்டம் செக்ஷன் 71, 16-வது பிரிவின் கீழ் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை ஜார்ஜ்டவுன் கௌரவ மாஜிஸ்திரேட்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ரோடில் 'அறப்போர் வெற்றி', 'மும்முனைப் போராட்ட நாள்' என எழுதி ரோட்டை அசுத்தமும், ஆபாசமும் செய்ததாக எதிரிகள் நால்வரும் குற்றம் செய்திருப்பதாகக் கோர்ட்டார் தெரிவித்தனர்.

"நாங்கள் குற்றவாளிகள் அல்ல" என தோழர்கள் நால்வரும் மறுத்தனர்.

பின்னர் பிராசிகியூஷன் தரப்பில் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டனர். முதல் சாட்சியாக சப் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார். தோழர்கள் நால்வரும் அவரை குறுக்கு விசாரணை செய்தனர்.

கோர்ட்டார் தோழர்களை, 'உங்களுக்கு சாட்சிகள் உண்டா?' என்று கேட்டதற்கு தோழர் பாலசுந்தரம் 'உண்டு' என்று கூறி சாட்சியின் பெயரையும், விலாசத்தையும் தெரிவித்தார்.

வழக்கு 5—8—54 அன்று மீண்டும் விசாரிக்கப்படும்.

பண்டித நேருவின் அறிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களை அலட்சியப்படுத்துவதும், நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைந்த பின்னர் மக்கள் கோரிக்கைகளுக்கு ஏதோ ஒரு முறையில் சாக்கு போக்குச் சொல்வதும் ஆட்சியாளர்களின் இயல்பாக இருக்கிறது.

திரு—கொச்சி அறப்போர் குறித்து பண்டித நேரு ஆச்சரியப்படுவதாக அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

"திரு-கொச்சி ராஜ்யத்தின் சில பகுதிகளில் இருவர்க்கும் தமிழ் நாடு காங்கிரசின் கிளர்ச்சி இன்னும்தொடர்ந்து நடைபெறுவது கண்டு வருத்தமும் ஆச்சரியமும் அடைகிறேன்.

இராஜ்யம் புனர் அமைப்புக் கமிஷன் இதுபற்றி விசாரணை நடத்திக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே! அந்தக் கமிஷனின் சிபார்சுகள் கிடைக்கும் வரை இந்த விஷயத்தில் இந்திய சர்க்காரோ, ராஜ்ய சர்க்காரோ எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள இயலாது,"

என்று பண்டித நேரு, தான் விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறார்.

'இனக் கலப்பு' எண்ணிக்கை!

உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் 2½ சதவிகிதம் அல்லது சுமார் 5 கோடி பேர் இனக்கலப்பு உடையவர்கள் என, யுனெஸ்கோவினர் 'இனக்கலப்பு' பற்றிய ஆராய்ச்சி செய்ய பணித்திருந்த டாக்டர் ஷபிரோ என்பவர் ஆராய்ச்சி செய்து குறிப்பிட்டுள்ளார்.

திரு—கொச்சி மாநிலத்தில் விவசாய வருமான வரிச் சட்டம் அமுல் நடத்தப்படும் விவரங்களை கற்றறிந்து வர சென்னை அரசாங்கம் ஆர். ஆர். சிவராமன் என்ற அதிகாரியை அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

திருத்தம்

30—7—54 'நம் நாடு' இதழின் 4-ம் பக்கம் 2-ம் கலத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்ட செய்தியில், "2—11—54 முதல் 24—7—54 வரை" என்றிருப்பதை, "2—11—52 முதல் 24—7—54 வரை" என திருத்தி வாசித்துக் கொள்ளவும். (ஆ-ர்)

* * *

21—7—54 'நம் நாடு' 3-ம் பக்கம் 5-ம் கலம் "மும்முனைப் போர் வெற்றி முழக்க விழா" நிகழ்ச்சியில் 15—7—54ல் சென்னை புதுப்பேட்டை தி. மு. கழகச் சார்பில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா கூட்டம் என்பதை திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் என திருத்தி வாசித்துக்கொள்ளவும். (ஆ-ர்)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம், அச்சகம் ... ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, ...